**செய்தி வெளியீடு எண்.827** **நாள்.26.12.2007**

# மருத்துவத் தாவரங்களைப்
# பயிரிட மத்திய அரசு
# நிதியுதவி வழங்குகிறது

உலக அளவில் மருத்துவத் தாவரங்களின் சந்தை வணிகம் பெருகிவரும் நிலையில் நெல்லி, அசோகு, கீழாநெல்லி, சிறுகுறிஞ்சான், நிலவேம்பு, மணத்தக்காளி, துளசி, பச்சைநாபி உள்ளிட்ட 32 வகை மருத்துவத் தாவரங்களை வணிக நோக்கில் பயிரிட மத்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை (ஆயுஷ்) நிதியுதவி வழங்குகிறது.

குறைந்தபட்சம் 5 ஏக்கர் பரப்பளவில் குழுக்களாகச் சேர்ந்து மருத்துவத் தாவரங்களைப் பயிரிட விரும்பும் விவசாயிகள், கூட்டுறவுச் சங்கங்கள், சுயஉதவிக் குழுக்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் குறிப்பிட்ட விண்ணப்ப படிவத்தில் நிதியுதவி கோரி விண்ணப்பிக்கலாம். மூலிகை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்கள், சுய உதவிக் குழுக்கள் அமையப்பெறாத இடங்களில் அவற்றை உருவாக்கிடவும் தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி:

**உறுப்பினர்– செயலர்,**
**மாநில மருத்துவத் தாவரங்கள் வாரியம்,**
**இந்திய மருத்துவத் துறை இயக்குநரகம்,**
**(அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம்),**
**அரும்பாக்கம், சென்னை 600 106.**

செயலர்
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை
தலைமைச் செயலகம்
சென்னை–9.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**